முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

எதிர்காலம் குறித்தஇந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்தமகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சோபகிருது வருடம் ஆனிமாதம் 24 திகதி முதல்

சோபகிருது வருடம் ஆனிமாதம் 31 திகதி வரை

(09.07.2023 ஞாயிறு முதல் 16.07.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. கந்தப் பெருமான் சக்தியாக
   கருணை மிக்க வடிவாக
   எந்தவித எதிர்பார்ப்புமின்றி
   இந்தப் பேருலகை மீட்பேன்என
2. என அவதாரம் புரிந்த ஞானியே
   இணையிலா ஆறுமுக அரங்கனே
   ஞானம்பட உன்பெருமை கூறி
   நானிலத்தில் ஞானியர் நீகேட்க
3. கேட்கவே இந்தியா தமிழகத்தில்
   கூறிடுவேன் சோபகிருது மிதுனதிங்கள்
   திட்டமுடன் அறுநான்குதிகதிமேல் முப்பானோர்திகதி வரை
   தெரிவிப்பேன் நடக்கும் நிகழ்வாக
4. நிகழ்வாக வருங்கால பலன்குறித்த
   நிலமதனில் வார ஆசிதனை
   அகத்திய மகரிஷியானும் உரைப்பேன்
   ஆற்றல்மிக்க ஞானவான்கள்
5. ஞானவான்கள் வெளிப்பட்டு
   நம்பிக்கை மக்களுக்குத் தந்து
   தானதரும தயவு நெறிகளை
   தக்கபடி அருள இருக்க

6. இருக்கவே இந்தியா தமிழக
இதுகால ஆளுமை சக்திகள்
கருத்தாக அரங்கன் வழியை
கட்டாயம் அனுகி ஏற்று
7. ஏற்று ஆட்சிமுறை தொடர
எல்லாத் துறை வகையான
பற்றாமை நிலை விலகி
பாதுகாப்பான வளர்ச்சி கண்டு
8. கண்டுமே அதிகாரிகளிடை
காணுகின்ற பதுக்கல் சுரண்டல்
உண்டான ஊழல் வழிகள்
உத்தமமிலா நிலைகள் யாவும்
9. யாவும் விலகிப் பெருமாற்றம்
உண்மை வழிகளாக மாறி
அவனி வியக்க அனைத்துத் துறையும்
ஆற்றல்பட பயன்தரும் வண்ணம்
10. வண்ணம் இயங்கி மாற்றம்
வளர்ச்சி சூழலாக மாறி
எண்ணம் ஞான வழியாகி
இந்தியா தமிழகம் ஞானஆட்சிதனை காணும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் ஆனி மாதம் 24ம் நாள் 09.07.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் ஆனி மாதம் 31ம் நாள் 16.07.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

முருகப்பெருமானின் சக்தி வடிவமாக கருணையே வடிவமாக உலகினில் எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் தன்னலம் இன்றி இந்த உலக மக்களை மீட்பேன் என்று இவ்வுலகை காக்க வேண்டி அவதாரம்

புரிந்து வாழும் ஞானியே ஈடுஇணையற்ற ஆறுமுக அரங்க மகா தேசிகனே உமது பெருமைகளை உலகறிய கூறியே தாம் எம்மிடன் வருங்காலம் குறித்து கேட்க அகத்திய மகரிஷி யானும் இந்தியா தமிழகத்தில் சோபகிருது வருடம் ஆனி மாதம் **24**ம் நாள் **09.07.2023** ஞாயிற்றுக்கிழமை முதல் ஆனி மாதம் **31**ம் நாள் **16.07.2023** ஞாயிற்றுக்கிழமை வரை நடக்கவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

உலகினில் ஆற்றல்மிக்க ஞானவான்கள் வெளிப்பட்டு மக்களுக்கு நம்பிக்கை தந்து தானதரும தயவு நெறிகளை உலகமக்களுக்கு அருள இருக்கின்றார்களப்பா.

ஆதலினாலே இந்தியா தமிழக மக்கள் பொறுப்பில் உள்ளோர் அரங்கமகான் கூறும் தானதரும தயவு நெறிகளை ஏற்று ஜீவதயவின் வழி ஆட்சியை தொடர நாட்டின் எல்லாதுறைகளும் பற்றாக்குறை விலகி வளர்ச்சி அடையும்.

அதிகாரிகளிடையே காணும் பதுக்கல், சுரண்டல், ஊழல் வழிகள் என நன்மையற்ற வழிகள் யாவும் விலகிடும். பெரும் மாற்றம் உண்டாகும் உண்மை வழிகளாக மாறும்.

இந்த உலகமே வியக்கும் அளவிற்கு நாட்டின் அனைத்து துறைகளும் ஆற்றல்பெருகி நாட்டின் வளர்ச்சியும் அதிகமாகி மக்களிடை தானதருமமும் தயவும் பெருகி மக்கள் ஞானம் பெற்று இந்தியா தமிழக ஆட்சி ஞான ஆட்சியாக மாறிடும் எனக்கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–